**தனி கவனம் மிகவும் அவசரம்**

அனுப்புநர்

திரு.அ.சண்முகசுந்தரம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் - 632 009.

பெறுநர்

1. தொழில்நுட்ப கல்வி இயக்கம், சென்னை.
2. பதிவாளர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்.
3. முதன்மை கல்வி அலுவலர், வேலூர்
4. மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர், வேலூர்
5. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர் / திருப்பத்தூர், வாணியம்பாடி, அரக்கோணம், இராணிப்பேட்டை
6. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்
7. சம்பந்தப்பட்ட அனைத்துக் கல்வி நிறுவனங்கள்.

**ந.க.எண்: என்.5/14852/2019 நாள்:27.08.2019**

அய்யா/ அம்மையீர்,

பொருள்: வேலூர் மாவட்டம் - சிறுபான்மையினர் நலம் - கல்வி உதவித்தொகை – பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை - 2019-20 – கல்வி நிறுவனங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது - தொடர்பாக.

பார்வை:
1. புது தில்லி சிறுபான்மையினர் விவாகார அமைச்சகத்தின் இந்திய அரசின் செயலாளரின் நேர்முகக் கடிதம் எண் 8-3/2019-SS
2. மத்திய அரசு கடித எண்.8-4/2019-SS, சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகம், புது தில்லி, நாள்:17.07.2019.
3. சென்னை சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.பி1/2761/2019, நாள்:18.07.2019.
4. இவ்வலுவலக கடித எண் : என்5/14852/2019 நாள்: 20.07.2019 மற்றும் 21.08.2019.
5. சென்னை சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்களின் நேர்முக கடித எண்.பி1/2761/2019, நாள்:22.08.2019.

Scanned by CamScanner

பார்வையில் 5-இல் காணும் சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் அவர்களின் நேர்முக கடிதத்தில் 2019-20-ஆம் கல்வியாண்டில் சிறுபான்மையினர் நலத்துறையில் மூலம் செயல்படுத்தப்படும் பள்ளிப்படிப்பு, பள்ளிமேற்படிப்பு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டங்கள். தேசிய கல்வி உதவித்தொகை இணையம் (National Scholarship Portal) மூலம் செயல்படுத்துவது தொடர்பான முதல் கட்ட பணியான பள்ளி கல்வி நிறுவனங்கள் மேற்படி இணைய தளத்தில் பதிவு செய்தலும், சம்பந்தப்பட்ட பள்ளிகள் தங்களது பொறுப்பு அலுவலரை (Institute Nodal Officer) நியமித்து படிவத்தினை தரவிறக்கம் செய்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் ஒப்படைத்தலே ஆகும். இப்பணிகள் 31.08.2019-க்குள் முடிவடைய வேண்டும்.

**வேலூர் மாவட்டத்தில் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (NSP) 3337 கல்வி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கல்வி நிலையங்களின் சரிபார்ப்பு படிவம் (Institute Nodal Officer Registration Form) இவ்வலுவலகத்தில் நாளது தேதி வரை 298 (9%) கல்வி நிலையங்கள் மேற்கண்ட நியமன படிவத்தினை இவ்வலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.**

எனவே, இதுவரை சரிபார்ப்பு படிவத்தினை பதிவு செய்யாத கல்வி நிலையங்கள் தேசிய கல்வி உதவித்தொகை (NSP) இணையதளத்தில் ஆன்லைனில் படிவத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டவுடன் சரிபார்ப்பு படிவத்தினை 2 நகல்கள் பிரிண்ட எடுத்து ஒருங்கிணைப்பு அலுவலர் (Institute Nodal Officer) மற்றும் பள்ளி / கல்வி நிலைய தலைவரின் கையொப்பம் பெற்று இவ்வலுவலகத்தில் அதி விரைவில் சமர்ப்பிக்க தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பள்ளி / கல்வி நிலைய தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்திடவும் மேலும் அனைத்து பள்ளி கல்வி நிறுவனங்கள் தேசிய கல்வி உதவித் தொகை இணையதளத்திற்கென தனியே ஒருங்கிணைப்பு அலுவலரை நியமனம் செய்ய அறிவுறுத்தவும் கேட்டுக்கொள்கிறேன்.

Scanned by CamScanner

மேலும் கல்வி நிறுவனங்கள் இணையதளத்தில் பதிவு செய்த சரிபார்ப்பு படிவத்தினை (Institute Nosal Officer Registration Form) இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இணையதளம் மூலம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே மாணவ / மாணவியர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தினை இணையதளத்தில் கல்வி நிறுவனங்கள் சரிபார்க்க முடியும் என்பதால் சென்னை சிறுபான்மையினர் நல ஆணையர் அவர்களின் நேர்முக கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அனைத்து பள்ளி கல்வி நிறுவனங்கள் தேசிய கல்வி உதவித் தொகை இணையதளத்தில் ஒருங்கிணைப்பளாரை 31.08.2019-க்குள் பதிவு செய்து முடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் தொடர்பாக தனி கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
வேலூர்.

Scanned by CamScanner